**பத்தாம் வகுப்பு – தமிழ்**

**நேரம் – 1.30 மணி** **தேர்வு – 6 (இயல் 6-9)** **மதிப்பெண்கள் 50**

**பகுதி – I (மதிப்பெண்கள் 8)**

**i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **7×1=7**

**ii) குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1. கரகாட்டத்தை கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர்.
   இத்தொடருக்கான வினை எது ?
   அ) கரகாட்டம் என்றால் என்ன ? ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
   இ) கரகாட்டத்தின் வேறு வேறு வடிவங்கள் யாவை ? ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?
2. மாலவன் குன்றம் போனாலென்ன ? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும். மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே
   அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
   இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்
3. இருநாட்டு அரசர்களும் தும்பை பூவைச்சூடி போரிடுவதன் காரணம் ---------- .
   அ) நாட்டை கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
   இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
4. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர்------.
   அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
   இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்
5. "இவள் தலையில் எழுதியதோ
   கற்காலம்தான் எப்போதும்..." - இவ்வடிகளில் கற்காலம் என்பது
   அ) தலைவிதி ஆ) பழைய காலம் இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

தாதுகு சோலை தோறுஞ் சண்பகக் காடுதோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணற் றடங்க டோறும்
மாதவி வேலிப் பூக வனம்தொறும் வயல்க டோறும்
ஓதிய வுடம்பு தோறு முயிரென வுலாய தன்றே

6. இப்பாடல்இடம்பெற்றுள்ளநூல்?
   அ)காசிக்காண்டம் ஆ) கொய்யாக்கனி இ)சிலப்பதிகாரம் ஈ)கம்பராமாயணம்
7. மாதவி வேலி – பொருள் தருக.
   அ) குருகத்தி வேலி ஆ) கமுக வேலி இ) பாக்கு வேலி ஈ) பூக வேலி

**பகுதி – II (மதிப்பெண்கள் 8)** **பிரிவு -1**

**எவையெனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **2×2=4**

8. விடைக்கேற்ற வினாவினை அமைக்க.
   அ. ம.பொ.சி அவர்கள் சிலம்புச்செல்வர் என்று போற்றப்படுகிறார்?
   ஆ. தமிழர் போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர்.
9. கூரான ஆயுதம் எது என்று செந்நாப் போதகர் கூருகிறார்? ஏன் என்பதை விளக்குக.
10. குறிப்பு வரைக.– 'அவையம்'

**பிரிவு -2**

**எவையெனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வெண்டும்.** 2×2=4

11. அவன் உன்னிடமும் என்னிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை.
(படர்க்கையை முன்னிலையாக, முன்னிலையைத் தன்மையாக, தன்மையைப் படர்க்கையாக மாற்றுக.)

12. தொடர் சொற்றொடராக மாற்றுக.
இன்னாசியர் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்பவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.

13. தொகைச் சொற்களைப்பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.
அ) அறுசுவை - ஆ) பத்துப்பாட்டு -

**பகுதி – III (மதிப்பெண்கள் 9)** **பிரிவு - 1**

**எவையெனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 1×3=3

14. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துக்கலை குறித்து இரண்டு வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் எழுதுக.



15. ஆஸ்திரிய நாட்டு அருங்காட்சியகத்தில் உள்ள வணிக ஒப்பந்தத்தைப் பற்றி கூறுக.

**பிரிவு - 2**

**எவையெனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 1×3=3

16. பலரிடம் உதவி பெற்றுக் கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை?

17. செங்கற்கள் அறியாது" - இடஞ்சுட்டிப் பொருள் தருக.

**பிரிவு – 3**

**எவையெனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 1×3=3

18. "அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்" – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

19. நிரல்நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.

**பகுதி – IV (மதிப்பெண்கள் (10)**

**அனைத்தது வினாக்களுக்கும் மட்டும் விடையளிக்க.** 2×5=10

20.அ) கருணையன் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர்தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க. (அல்லது)

ஆ) பள்ளித் திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

21. அ) மொழிபெயர்க்க.

i) Education is what remains after one has forgotten what one has learned in School.

– Albert Einstein

ii) Tomorrow is often the busiest day of the week. – Spanish proverb

iii) It is during our darkest moments that we must focus to see light. – Aristotle

iv) Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts.

– Winston Churchill. (அல்லது)

ஆ) நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக .

மகளிர் நாள்விழா

இடம்: பள்ளிக் கலையரங்கம் நாள்:08.03.2019. கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் – தலைமையாசிரியரின் வரவேற்பு – இதழாளர் கலையரசியின் சிறப்புரை – ஆசிரியர்களின் வாழ்த்துரை – மாணவத் தலைவரின் நன்றியுரை.

**பகுதி - V (மதிப்பெண்கள் 16)**

**அனைத்தது வினாக்களுக்கும் மட்டும் விடையளிக்க. 2×8=16**

22. அ) நிகழ்கலை வடிவங்கள் – அவை நிகழும் இடங்கள் அவற்றின் ஒப்பனைகள் – சிறப்பும் பழமையும் – இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் – அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன - இவை குறித்து நாளிதழ் ஒன்றில் தலையங்கம் எழுதுக.

(அல்லது)

ஆ)குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.

(மாணவன்–கொக்கைப் போல, கோழியைப் போல – உப்பைப் போல – இருக்க வேண்டும் – கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் – குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி – கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் – ஆசிரியர் விளக்கம் – மாணவன் மகிழ்ச்சி.)

23. அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

குறிப்புகள் : முன்னுரை – நீரின்றி இயங்காது உலகம் – நீர்ப்பற்றாக்குறைக்குக் காரணம் – சேமிக்கும் முறைகள் – மழைநீர்ச்சேகரிப்புத் தொட்டி – மழைநீரின் பயனகள் – முடிவுரை.

ஆ) மங்கையராய்ப் பிறப்பதற்கே துணைப்பாடத்தில் வரும் நும் மனம் கவர்ந்த மூவரைப்பற்றி எழுதுக.

www.Padasalai.Net